செ.வெ.எண் : 21/ செப்டம்பர் நாள் : 15.09.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

## முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு சார்ந்தோர் சான்று மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

கலை மற்றும் அறிவியல், பொறியியல் தொழில்நூட்பக் கல்லூரிகளில் முன்னாள் படைவீரர்களின் சிறார்கள் அவர்களுக்கான இட ஒதுக்கீட்டில் சேர்வதற்கு முன்னாள் படைவீரர் நல அலுவலகம் வாயிலாக சார்ந்தோர் சான்று வழங்கப்பட்டு வருகிறது. 2018-2019-ம் ஆண்டு முதல் முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு E-Governance Module வாயிலாக validation செய்து சார்ந்தோர் சான்று வழங்கப்பட்டு வருகிறது. முன்னாள் படைவீரர்களின் விவரங்கள் அனைத்தும் E-Governnance Module-ல் Validation செய்து சார்ந்தோர் சான்று பெற விரும்பும் முன்னாள் படைவீரர்களின் சிறார்கள் முன்னாள் படைவீரர்களின் படைவிலகல் சான்று, ஓய்வூதிய ஆணை(PPO), அடையாள அட்டை, ஆதார் அட்டை, வங்கிக் கணக்குப் புத்தகம். கல்லூரி விண்ணப்ப நகல், தேர்வு பதிவு எண், சாதிச் சான்றிதழ், பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் உள்ளிட்ட ஆவணங்களுடன் முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி விண்ணப்பித்து சான்றோர் சான்றிதழ் பெற்று பயனடையலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**